17.06.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தேனியில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் தொடக்கம்

தேனியில் உள்ள வேளாண்மை விளைபொருள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் புதன்கிழமை கொப்பரைத் தேங்காய் நேரடி கொள்முதல் தொடங்கி உள்ளது என்று மாவட்ட ஆட்சியர் ந.வெங்கடசாலம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி: தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மூலம், தேனியில் உள்ள வேளாண்மை விளைபொருள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் பருத்தி அரவை ஆலையில் கொப்பரைத் தேங்காய் நேரடி கொள்முதல் தொடங்கியுள்ளது.

அரசு அறிவித்துள்ள ஆதார விலைத் திட்டத்தின் கீழ், விவசாயிகள் கொப்பரை தேங்காயை நியாயமான விலைக்கு விற்று பயனடையலாம். அரவை கொப்பரை கிலோ ஒன்று ரூ.59.50-க்கும், பந்து கொப்பரை கிலோ ஒன்று ரூ.62.40-க்கும் கொள்முதல் செய்யப்படும்.

கொள்முதல் மையத்துக்கு கொப்பரை தேங்காய் கொண்டு வரும் விவசாயிகள், தங்களது தோட்டத்தில் தென்னை சாகுபடி செய்துள்ளதற்கு கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சான்று, சிட்டா மற்றும் அடங்கல், வேளாண்மைத் துறையால் வழங்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கான அடையாள அட்டை, வங்கி கணக்கு எண், குடும்ப அட்டை ஆகியவற்றின் நகல்களை அளிக்க வேண்டும். செல்லிடபேசி எண்ணையும் தெரிவிக்க வேண்டும்.

தரம் சரிபார்க்கப்பட்டு கொள்முதல் செய்யப்படும் கொப்பரை தேங்காய்களுக்கு விவசாயிகளின் விருப்பத்தின் பேரில், அவர்களது வங்கி கணக்கில் மின்னணு பண பரிவர்த்தனை மூலமோ, கோடிட்ட

காசோலை மூலமோ கொள்முதல் செய்த 3 தினங்களுக்குள் பணம் பட்டுவாடா செய்யப்படும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திருப்புவனத்தில் அரசு தேங்காய் கொள்முதல் நிலையம் திறப்பு

அரசு சார்பில், திருப்புவனத்தில் தேங்காய் கொள்முதல் நிலையம் புதன்கிழமை திறக்கப்பட்டது.

திருப்புவனம் பகுதியில் தென்னை மரங்கள் அதிகமாக உள்ளன. இந்த மரங்களில் விளையும் தேங்காய்களை விவசாயிகள் நேரடியாகவும், இடைத்தரகர்கள் மூலமாகவும் வெளியூர் வியாபாரிகளுக்கு விற்பனை செய்து வந்தனர்.

இதனிடையே, திருப்புவனத்தில் அரசு சார்பில் தேங்காய் கொள்முதல் நிலையம் திறக்கப்பட வேண்டும் என நீண்டகாலமாக தென்னை விவசாயிகள் வலியுறுத்தி வந்தனர். சிவகங்கை மாவட்டத்தில் சிங்கம்புணரியில் ஏற்கெனவே அரசு தேங்காய் கொள்முதல் நிலையம் செயல்பட்டு வருகிறது. தற்போது, திருப்புவனத்தில் பழையூர் பகுதியில் அரசு தேங்காய் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மூலம் இக் கொள்முதல் நிலையம் செயல்படும் எனவும், திருப்புவனம் பகுதியைச் சேர்ந்த தென்னை விவசாயிகள் தாங்கள் விளைவிக்கக்கூடிய தேங்காய்களை இந்த கொள்முதல் நிலையத்தில் விற்பனை செய்து பயனடையலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வரத்து அதிகரிப்பால் தக்காளி கிலோ ரூ. 55 ஆக சரிவு

ஈரோட்டில் தக்காளி வரத்து அதிகரிப்பால் விலை குறைந்து கிலோ ரூ. 55-க்கு விற்பனை செய்யப்பட்டது.

கடும் வெயில், பருவம் தவறி பெய்யும் மழை உள்ளிட்ட காரணங்களால் தக்காளி விளைச்சல் பாதிக்கப்பட்டது. இதனால் மார்க்கெட்டுகளுக்கு தக்காளி வரத்து குறைவாகவே இருந்தது. இந்நிலையில், முகூர்த்த காலம் என்பதால் தக்காளி தேவை அதிகரித்ததன் காரணமாக தக்காளி விலை கடந்த சில நாள்களாக கிடுகிடுவென உயர்ந்து ஈரோட்டில் கிலோ தக்காளி ரூ. 80 வரையிலும் விற்பனையானது.

இந்நிலையில், தற்போது தக்காளி வரத்து ஓரளவுக்கு அதிகரித்ததால் கிலோவுக்கு செவ்வாய்க்கிழமை ரூ. 20 குறைந்து ரூ. 60-க்கு

விற்பனையானது. இதற்கிடையே வரத்து அதிகரித்த நிலையில் தேவையும் குறைந்ததால் புதன்கிழமை காலை கிலோ ரூ.55-க்கு விற்பனையானது.

இதுதொடர்பாக வியாபாரிகள் கூறுகையில், ஈரோடு சந்தைக்கு தருமபுரி, கிருஷ்ணகிரி, தாளவாடி, மேச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து அதிக அளவில் தக்காளி வருகிறது. கடந்த சில நாள்களாக தொடர்ச்சியாக முகூர்த்த காலம் இருந்ததால் தக்காளி தேவை அதிகரித்தது. இதனால் விலை உயர்ந்தது. வருகிற நாள்களில் குறிப்பாக ஆந்திர தக்காளி வரத்து தொடங்க உள்ளதால் விலை உயர வாய்ப்பு இல்லை எனத் தெரிவித்தார்.

## கருங்கல்பாளையம் சந்தைக்கு மாடுகள் வரத்து குறைந்தது

ஈரோடு கருங்கல்பாளையம் மாட்டு சந்தையில் மாடுகள் வரத்து குறைவாக இருந்தபோதிலும் விற்பனை விறுவிறுப்பாக நடைபெற்றது.

ஈரோடு கருங்கல்பாளையம் பகுதியில் வாரந்தோறும் புதன் இரவு முதல் வியாழக்கிழமை மதியம் வரை மாட்டு சந்தை நடைபெறுவது வழக்கம். இந்த மாட்டு சந்தைக்கு ஆந்திரம், தெலங்கானா, கர்நாடகம், மகாராஷ்டிரம், கோவா போன்ற மாநிலங்களில் இருந்து வியாபாரிகள் அதிக அளவில் வந்து மாடுகளை வாங்கிச் செல்கின்றனர்.

இந்நிலையில், கடந்த சில தினங்களாக மாவட்டம் முழுவதும் பெரும்பாலான இடங்களில் நல்ல மழை பெய்து வருவதால் மாடுகளுக்குத் தேவையான தீவனம் கிடைத்துள்ளது. இதனால் வியாழக்கிழமை நடைபெற்ற சந்தையில் மாடுகள் வரத்து குறைந்து காணப்பட்டாலும், வெளிமாநிலத்தை சேர்ந்த வியாபாரிகள் அதிக அளவில் வந்து மாடுகளை வாங்கிச் சென்றனர்.

இதுதொடர்பாக கருங்கல்பாளையம் மாட்டு சந்தை மேலாளர் முருகன் கூறும்போது, புதன்கிழமை இரவு முதலே மாடுகள் விற்பனைக்கு வரத் தொடங்கின. மாடுகளை வாங்குவதற்காக வெளிமாநில வியாபாரிகள் புதன்கிழமை இரவில் இருந்தே வரத் தொடங்கி விட்டனர்.

தற்போது மழை பெய்து வருவதால் மாடுகளுக்குத் தேவையான தீவனம் தட்டுப்பாடு இன்றி கிடைப்பதால் வழக்கத்தை விட கறவை மாடுகள் வரத்து சிறிது குறைந்து காணப்பட்டது. வியாழக்கிழமை நடந்த மாட்டு சந்தையில் 500 பசுமாடு, 450 எருமை மாடு, 300 வளர்ப்பு கன்றுகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டன.

இதில் பசுமாடுகள் ரூ. 16 ஆயிரம் முதல் ரூ. 32 ஆயிரம் வரையிலும், எருமை மாடு ரூ. 18 ஆயிரம் முதல் ரூ. 34 ஆயிரம் வரையிலும் விற்பனையானது. வளர்ப்பு கன்றுகள் ஆயிரம் ரூபாய் முதல் ரூ. 6 ஆயிரம் வரையிலும் விற்பனையானது என்றார்.

## நீலகிரி அரசு தோட்டக்கலைப் பண்ணையில் காரனேஷன் மலர் நாற்றுகள் விநியோகம் தொடக்கம்

கொய்மலர் சாகுபடிக்காக வெளிநாடுகளிலிருந்து காரனேஷன் மலர் நாற்றுகளை இறக்குமதி செய்து வந்த நிலை மாறி, நாட்டிலேயே முதன்முறையாக நீலகிரி அரசு தோட்டக் கலைப் பண்ணையிலிருந்து விவசாயிகளுக்கு மலர் நாற்றுகளை விநியோகிக்கும் பணி தொடங்கியுள்ளது.

கொய்மலர் சாகுபடியில் நீலகிரி மாவட்டம் பிரதான இடத்திலுள்ள மாவட்டமாகும். சுமார் 30 ஹெக்டேர் பரப்பளவில் கொய்மலர் சாகுபடி நடைபெற்றுவந்த சூழலில் பல்வேறு காரணங்களுக்காக தற்போது 20 ஹெக்டேரில் மட்டுமே கொய்மலர் சாகுபடி நடைபெறுகிறது.

இங்கு பசுமைக் குடில்களில் காரனேஷன், லில்லியம், ஜெர்பரா, கிரசாந்திமம் உள்ளிட்ட மலர் ரகங்களும், பசுமைக் குடில் இல்லாமல் அல்ஸ்டிரோமரியா, பேர்ட் ஆஃப் பாரடைஸ், ஸ்டாட்டிஸ், கிளாடியோலி உள்ளிட்ட மலர் ரகங்களும் வளர்க்கப்பட்டு வருகின்றன.

இதில் பிரதான இடத்தில் காரனேஷன் மலரே உள்ளது. காரனேஷன் மலருக்கான தாய் நாற்றுகளை ஹாலந்து, ஸ்பெயின் மற்றும் இத்தாலி உள்ளிட்ட நாடுகளிலிருந்து தனியார் மூலம் இறக்குமதி செய்து அதை கூடுதல் விலைக்கு விற்று வந்தனர். குறிப்பாக இத்தகைய நாடுகளிலிருந்து புணேவுக்கு தாய் நாற்றுகள் வரவழைக்கப்பட்டு அங்குள்ள தனியார் பண்ணைகள் மூலமே தமிழகத்துக்கு கொண்டு வரப்பட்டது. இதற்காக ஒரு நாற்றுக்கு ரூ. 15 வரை செலவிட வேண்டிய சூழல் இருந்தது.

இந்நிலையில், தேசிய தோட்டக் கலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்திலுள்ள கொய்மலர் சாகுபடி விவசாயிகளுக்காக இங்கேயே மலர் நாற்றுகளை உற்பத்தி செய்யும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்காக ரூ. 1.4 கோடி நிதியும் ஒதுக்கப்பட்டது. நீலகிரி மாவட்டத்தில் தும்மனட்டி பண்ணைப் பகுதியே ஏற்ற இடமாக அமைந்ததால் அந்த இடத்தில் 5 ரகங்கள் சோதனை

அடிப்படையில் உற்பத்தி செய்யப்பட்டன. சுமார் 50,000 தாய் நாற்றுகளை உற்பத்தி செய்வதற்கேற்ற வசதிகள் இருந்தாலும் முதற்கட்டமாக 5,000 தாய் நாற்றுகள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டன.

இந்த சோதனை முயற்சி தற்போது வெற்றியடைந்துள்ளது. இதன் காரணமாக முதற்கட்டமாக 9 விவசாயிகளுக்கு காரனேசன் மலர் நாற்றுகளின் விநியோகத்தை மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் வியாழக்கிழமை தொடங்கி வைத்தார். இதன் மூலம் நாட்டிலேயே அரசு தோட்டக் கலைப் பண்ணையிலிருந்து காரனேஷன் மலர் நாற்றுகள் விநியோகம் தும்மனட்டி அரசு தோட்டக்கலைப் பண்ணையிலிருந்து தொடங்கியுள்ள பெருமையை பெற்றுள்ளது. இதனால் நீலகிரி மாவட்டத்தில் கொய்மலர் சாகுபடி பரப்பு அதிகரிப்பதோடு, காரனேஷன் மலர் சாகுபடியும் அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நாற்றுகள் ஒரு நாற்றுக்கு ரூ. 6 என்ற குறைந்த விலையிலேயே விற்கப்படுகின்றன. இதில் சிவப்பு நிற ரகம் டர்போ எனவும், ஆரஞ்சு நிற ரகம் மெலக்ஸ் எனவும், இளஞ்சிவப்பு நிற ரகம் பிக் ஒன் எனவும், இரு நிறங்களைக் கொண்ட மலர்கள் எக்ஸ்பிரஸ் கோலம் மற்றும் ஈசி கோலம் எனவும் அழைக்கப்படுகின்றன. இந்த 5 ரகங்களும் சந்தையில் பிரதான இடத்திலுள்ளவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் என்.மணி, துணை இயக்குநர் சிவ சாம்ராஜ், உதவி இயக்குநர்கள் மீரா பாய், உமாராணி, தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக உதகை ஆராய்ச்சி நிலையத்தின் அனிதா உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

## அரூர் கூட்டுறவு சங்கத்தில் கொப்பரை தேங்காய் கொள்முதல் தொடக்கம்

தருமபுரி மாவட்டம், அரூர் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், கொப்பரைத் தேங்காய் கொள்முதல் புதன்கிழமை தொடங்கியது.

கொள்முதலைத் தொடங்கி வைத்து மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் பேசியது: தென்னை விவசாயிகளுக்கு கொப்பரையிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிலுக்கும், தேங்காய்

நாரில் இருந்து கயிறு திரிக்கும் தொழிலுக்கும் அதிகளவு மானியமாக 40 சதவீதம் வழங்கப்படுகிறது.

தருமபுரியில் 1,000 விவசாயிகள் ஒருங்கிணைந்து நிறுவனம் தொடங்கியுள்ளதுபோல, அரூரிலும் 1,285 விவசாயிகள் ஒருங்கிணைந்து பயிர் சாகுபடி செய்துள்ளனர்.

அடுத்த 6 மாதங்களுக்கு கொப்பரை கொள்முதல் இங்கு நடைபெறும். தேங்காய் பருப்புக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.59.50, கொப்பரை கிலோ ரூ.62.40-க்கும் கொள்முதல் செய்யப்படுகிறது என்றார்.

நிகழ்ச்சியில், அரூர் எம்.எல்.ஏ. ஆர்ஆர்.முருகன், ஒன்றியக்குழுத் தலைவர் சி.தென்னரசு, வேளாண் துணை இயக்குநர் த.சந்திரசேகரன், வட்டாட்சியர் விஜயா, வேளாண் உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் அ.செ.ராஜா, மேலாண்மை இயக்குநர் எஸ்.பார்த்தசாரதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## விளைச்சல் குறைவால் பாலக்கோடு சந்தையில் தக்காளி விலை ஏற்ற-இறக்கம்!

விளைச்சல் குறைவால் பாலக்கோடு சந்தையில், தக்காளியின் விலையில் தொடர்ந்து ஏற்ற-இறக்கம் நீடித்து வருகிறது. வியாழக்கிழமை நிலவரப்படி, 25 கிலோ கொண்ட கூடை தக்காளி ரூ.1,150-க்கு விற்பனையானது.

உணவில் தவிர்க்க முடியாத விளைபொருளான தக்காளி, தருமபுரி மாவட்டம், பாலக்கோட்டில் உள்ள சந்தையிலிருந்து பெங்களூரு, கோவை, திருச்சி, மதுரை போன்ற பெருநகரங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. பாலக்கோட்டைச் சுற்றியுள்ள பெல்ரம்பட்டி, கரகூர், கோட்டூர், புதூர் உள்ளிட்ட 25-க்கும் மேற்பட்ட ஊர்களின் பிரதான சாகுபடி தக்காளிதான்.

கடந்த சில வாரங்களாகவே தமிழ்நாடு மட்டுமல்லாது, நாடு முழுவதும் தக்காளியின் விலையில் கடுமையான ஏற்றம் காணப்பட்டது. தில்லி, சென்னை போன்ற தலைநகரங்களில் தக்காளி கிலோ ரூ.100-க்கு விற்பனையாகி வருகிறது.

இந்த நிலையில், பாலக்கோடு தக்காளிச் சந்தையில் வியாழக்கிழமை 25 கிலோ கொண்ட ஒரு கூடை மொத்த விலையாக ரூ.1,150-க்கு விற்பனையானது. கடந்த 4 நாள்களுக்கு முன் கூடை ரூ.1,600-க்கு விற்பனையானதாக அங்குள்ள வியாபாரி சீனி தெரிவித்தார். கடந்த ஒரு மாதமாக மழை இல்லாததால், தக்காளி சாகுபடி வெகுவாகக் குறைந்ததுதான் இதற்குக் காரணம் என்கிறார் அவர்.

தொலைவுக்கேற்ப கூடைக்கு ரூ.20 முதல் ரூ.50 வரை போக்குவரத்துச் செலவு ஏற்படுகிறது. சந்தைக் கட்டணம், ஏற்று-இறக்கு கூலி, மொத்த-சில்லறை வியாபாரிகளின் லாபம், கமிஷன் சேரும்போது, தக்காளியின் விலை அதிகமாகி விடுகிறது.

மேலும், தக்காளிச் செடியின் கடைசிக் காய்ப்பாக பெரும்பகுதி மிகச்சிறிய அளவில் உள்ளதும் விலை உயர காரணம் எனக் கூறப்படுகிறது.

தருமபுரி நகரில் சிறிய தக்காளி விற்பனை ஜோராக நடைபெற்று வருகிறது. வழக்கமான பெரிய தக்காளி கிலோ ரூ.60-க்கு விற்பனையாகும்போது, சிறிய தக்காளி கிலோ ரூ. 40-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

அதே நேரத்தில், பாலக்கோடு சுற்றுவட்டாரப் பகுதிகளில் சொட்டுநீர்ப் பாசன முறையில் விதைக்கப்பட்ட தக்காளிச் செடிகள் நன்றாக வளர்ந்துள்ளன. அடுத்த சில வாரங்களில் இச் செடிகளில் இருந்து தக்காளி விளைச்சல் வரும்போது விலை குறையலாம் என்கிறார்கள் விவசாயிகள்.

## பரமத்தி வேலூர் விற்பனை நிலையத்தில் கொப்பரை விலை உயர்வு

பரமத்தி வேலூர் விற்பனை நிலையத்தில் கொப்பரை விலை உயர்ந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

பரமத்தி வேலூர் வட்டத்தில் சோழசிராமணி, ஜேடர்பாளையம், அய்யம்பாளையம், பிலிக்கல்பாளையம், கபிலர்மலை, பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அனிச்சம்பாளையம், பாலப்பட்டி, மோகனூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் தென்னை சாகுபடி செய்துள்ளனர். இங்கு விளையும்

கொப்பரையை விவசாயிகள் பரமத்தி வேலூர் சேலம் ஒழுங்குமுறை விற்பனை நிலையத்தில் வாரம்தோறும் வியாழக்கிழமை நடைபெறும் கொப்பரை ஏலத்தில் விற்பனை செய்து வருகின்றனர்.

கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் 846 கிலோ கொப்பரை விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. இதில், ஒரு கிலோ ரூ.45.69 பைசா முதல் ரூ.49.69 பைசா வரையும், சராசரியாக ரூ.47.69 பைசாவுக்கும் ஏலம் போனது.

வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு 1,833 கிலோ கொப்பரை விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. இதில், ஒரு கிலோ ரூ.51.70 பைசா முதல் சராசரியாக ரூ.50.39 பைசா வரை ஏலம் போனது.

கடந்த வாரத்தைவிட இந்த வாரம் கொப்பரை வரத்து அதிகரித்த போதும், வியாபாரிகள் அதிகளவு வந்ததால் விலை உயர்ந்ததாக விவசாயிகள் தெரிவித்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## அறிவியலில் சுதேசி

விவசாயப் பிரிவில் மொத்த மதிப்பில் 25 சதவீதம் பங்கு கால்நடைகளில் இருந்தே வருகிறது. 2 கோடியே 10 லட்சம் பேருக்கு கால்நடை வளர்ப்பு சுய வேலைவாய்ப்பினை தருகிறது. கால்நடைகளில் உள்நாட்டு கால்நடை வளமே நிரந்தரமான செல்வம். உள்நாட்டு கால்நடை இனங்கள் பருவகால மாறுதல் மற்றும் நோய்களினால் அதிகம் பாதிக்கப்படுவதில்லை. இந்த சுதேசி கால்நடை இனங்களை பரவலாக்க மத்திய அரசு 'ராஷ்ட்ரிய கோகுல் மிஷன்' என்ற திட்டத்தை தொடங்கி உள்ளது. இது தவிர உள்நாட்டு இனப்பெருக்கத்தை மேம்படுத்த தேசிய காமதேனு இனப்பெருக்க மையங்கள் அமைக்கப்பட உள்ளன.

**வேளாண் துறையில் காலியாக உள்ள பணியிடத்துக்கு விண்ணப்பம் வரவேற்பு**

கிருஷ்ணகிரி: வேளாண் பொறியியல் துறையில், காலியாக உள்ள உழுவை துடைப்பார் பணியிடத்தை நிரப்ப, விண்ணப்பம் வரவேற்கப்படுகிறது என, கலெக்டர் கதிரவன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண் பொறியியல் துறையில், ஓசூர் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் காலியாக உள்ள உழுவை துடைப்பாளர் பணியிடம், தற்போது நிரப்பப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் அருந்ததியர் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். குறைந்த பட்ச கல்வி தகுதி, எட்டாம் வகுப்பு தேர்ச்சியாகும். 18 வயது முதல், 35 வயது வரை இருக்க வேண்டும். தகுதியான கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் மட்டும், வரும், 22ம் தேதிக்குள், 'செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, புதிய காவலர் குடியிருப்பு சாலை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பின்புறம், கிருஷ்ணகிரி 635115' என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**போலி பூச்சிக்கொல்லி மருந்துகள் விற்பனை: வேளாண் அதிகாரிகள் 'ரெய்டு'**

பழநி: உரக்கடைகளில் கலப்பின போலி உயிரின பூச்சிக்கொல்லி மருந்துகள் விற்பனை புகாரையடுத்து வேளாண் அதிகாரிகள் திடீர் சோதனை செய்து வருகின்றனர்.

பழநியில் சிலகடைகளில் போலியான, கலப்பட பூச்சிகொல்லி மருந்துகள் விற்பனை செய்வதாக புகார் எழுந்துள்ளது. இதனால் மாவட்டத்தில் அனைத்து மருந்துகடைகளிலும் அதிகாரிகள் ஆய்வு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.
இதன்படி பழநி வேளாண் உதவி இயக்குனர் சுருளியப்பன் தலைமையிலான குழுவினர் ஒட்டன்சத்திரம் பகுதிகளிலும், தொப்பம்பட்டி வேளாண் உதவிஇயக்குனர் ரவிச்சந்திரன், பூச்சிமருந்து ஆய்வாளர் மீனாகுமாரி ஆகியோர் கொண்ட
குழுவினர் பழநிபகுதிகளிலுள்ள உரம் மற்றும் பூச்சிமருந்து விற்பனை கடைகளில் திடீர் ஆய்வு செய்து, கலப்படம் மற்றும் போலியான

பூச்சிமருந்துகள் விற்றால் கடைகளின் உரிமம் ரத்துசெய்யப்படும் எச்சரித்தனர்.

வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்,“ மத்திய அரசு அக்ரி படித்த நபர்கள் தான் பூச்சிக் கொல்லிமருந்துகளை விற்பனை செய்யவேண்டும், இயற்கை மருந்து விற்பனை என சான்றிதழ் உள்ளிட்ட சில கட்டுப்பாடுகள் உள்ளன.
பூச்சிகொல்லி மருந்து உரிமம் இல்லாமல் விற்ககூடாது. விவசாயிகள் மருந்து போலி என சந்தேகம் வந்ததால் அருகேயுள்ள வேளாண் அலுவலகத்தில் புகார் தெரிவிக்கலாம். போலி பூச்சிகொல்லி மருந்து விற்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்,”என்றார்.

## காய்கறி விலை அதிகமானாலும் விளைச்சல் பாதிப்பால் ஏமாற்றம்

ஒட்டன்சத்திரம்: தக்காளி, முருங்கை உள்ளிட்ட காய்கறிகள் உச்சபட்ச விலைக்கு விற்ற போதிலும் விளைச்சல் இல்லாததால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

அதிக உற்பத்தி, தேவை குறைவு உள்ளிட்ட காரணங்களால் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு அநேக நாட்களில், நல்ல விலை கிடைப்பது இல்லை. அத்தி பூத்தாற்போல் சில சமயங்களில் நல்ல விலை கிடைக்குமேயாயின் விளைச்சல் எதிர்பார்த்தபடி இருக்காது.

வரத்து குறைவு காரணமாக தற்போது தக்காளி, முருங்கை அதிக விலைக்கு விற்கிறது. ஆனால் காலநிலை மாற்றத்தால் போதிய விளைச்சல் இல்லை. எனவே விவசாயிகளால் இவ்வாய்ப்பை பயன்படுத்த முடிவில்லை.
கடந்த ஆண்டு வறட்சி காரணமாக ஒட்டன்சத்திரம் பகுதியில் காய்கறி விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டது. நவம்பரில் பெய்த பருவமழை காரணமாக இப்பகுதியில் காய்கறி விளைச்சல் அமோகமாக இருந்தது. ஆனால் அப்போது விற்ற விலையானது விவசாயிகளுக்கு கட்டுபடியானதாக இல்லை. இதனால் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது.
இந்நிலையில் சுட்டெரிக்கும் வெயில் மற்றும் கோடை மழை காரணமாக தக்காளி மற்றும் முருங்கை செடிகள் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதனால் வரத்து குறைந்து கடந்த சில நாட்களாகவே இவற்றின் விலை ஏறுமுகமாக காணப்பட்டது. நேற்று ஒரு கிலோ முருங்கை ரூ.75 க்கு விற்றது. தக்காளி 14 கிலோ கொண்ட பெட்டி ஒன்று ரூ.900 க்கு விற்றது.

எனவே, விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைத்தாலும் போதிய விளைச்சல் இன்றி விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### போச்சம்பள்ளி பகுதியில் கம்பு விளைச்சல் அதிகரிப்பு

போச்சம்பள்ளி : போச்சம்பள்ளி பகுதியில் கம்பு விளைச்சல் அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பரவலாக கம்பு பயிரிடப்பட்டு வருகிறது. போச்சம்பள்ளி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் சத்திரை பட்டத்தில் கம்பு பயிரிட்டிருந்தனர். கடந்த மாத இறுதியில் பெய்த மழையால் கம்பு செழித்து வளர்ந்துள்ளது. இன்னும் 10 நாட்களில் அறுவடைக்கு தயாராக உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

### மழையின்மை, வரத்துக்குறைவால் காய்கறி விலை கிடு கிடு உயர்ௌவு

சிவகங்கை, : வரத்துக்குறைவால் காய்கறி விலை கடுமையாக உயர்ந்துள்ளது. ஒரு கிலோ தக்காளி ரூ.60ஐ தாண்டியுள்ளது. இதனால், ஏழைகள், நடுத்தர மக்கள் தக்காளியை வாங்காமல் தவிர்க்கும் நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளனர்.

சிவகங்கை மாவட்டத்தில் திருப்புவனம், சிங்கம்புணரி, காளையார்கோவில், மானாமதுரை, மேலச்சாலூர், கீழச்சாலூர், இடையமேலூர், தமறாக்கி, மீனாட்சிபுரம், முடிகண்டம், சக்கந்தி உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் காய்கறி சாகுபடி செய்யப்படுகிறது.

கீரை வகைகள், கத்திரி, கொத்தவரங்காய், வெண்டை, தக்காளி, மிளகாய், மல்லி, சர்க்கரைவள்ளி, செடி முருங்கை, முள்ளங்கி உள்ளிட்ட பயிர்கள் இங்கு விளைவிக்கப்படுகின்றன. இதில் கடலை உள்ளிட்ட பயிர்களுக்கு இடையே ஊடு பயிராகவும் இவை சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன.இந்நிலையில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் காய்கறி

விவசாயம் செய்வது குறைந்து வருகிறது. இதனால், காய்கறிகளுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. இப்பகுதி மண்ணில் எந்தப் பயிரையும் விளைவிக்கலாம். நெல், கரும்பு முதல் காய்கறிகள் வரை நன்கு விளையும்.

ஆனால், போதிய மழை இன்மையால் பம்புசெட் மூலம் நீர் பாய்ச்ச வாய்ப்பிருக்கும் விளைநிலங்களில் மட்டுமே பயிரிட வேண்டிய நிலை உள்ளது. தற்போது அதிகப்படியான வெயில், போதிய மழை இல்லாத காரணத்தால் காய்கறி விளைச்சல் வழக்கத்தைவிட குறைந்துள்ளது. அதிகப்படியான வெப்பம் மற்றும் காற்றால் தக்காளி விளைச்சல் பாதிப்படைந்துள்ளது.

விளைச்சல் குறைவால் மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட வெளி மாவட்டங்களில் இருந்து வரும் காய்கறிகளை மட்டுமே நம்பியிருக்க வேண்டிய நிலை உள்ளது. இதனால் சிவகங்கை மாவட்டத்தில் காய்கறி விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் வரை கத்தரிக்காய் கிலோ ரூ.20க்கு விற்கப்பட்டு வந்த நிலையில் தற்போது ரூ.40 முதல் ரூ.60 வரை விற்கப்படுகிறது. இதுபோல் கிலோ ரூ.20க்கு விற்கப்பட்ட தக்காளி ஒரே வாரத்தில் கிலோ ரூ.60ஐ தாண்டியுள்ளது. பெரிய வெங்காயம் ரூ.40, சின்ன வெங்காயம் ரூ.40, அவரை, பீன்ஸ் கிலோ ரூ.60, வெண்டைக்காய் கிலோ ரூ.50, பாவைக்காய் கிலோ ரூ.50, கேரட் கிலோ ரூ.70 என கடுமையாக உயர்ந்துள்ளது. அனைத்துக் காய்கறிகளும் பல மடங்கு விலை உயர்ந்துள்ளன.

இது குறித்து குடும்பத் தலைவியான உஷாராணி கூறுகையில், “தக்காளி விலை உயர்வால் சாம்பாரை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. தக்காளி இல்லாமல் என்ன குழம்பு வைப்பது என்பதே பெரும் குழப்பமாக உள்ளது. ஆண்டுதோறும் முகூர்த்தக் காலங்கள் மற்றும் கார்த்திகை, மார்கழி மாதங்களில் கோயில்களுக்கு மாலை போட்டு விரதமிருப்பதால் காய்கறி விலை உயரும். தற்போது கத்தரிக்காய், தக்காளி உள்ளிட்ட அனைத்து காய்கறிகளின் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளன.

விலை உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால் காய்கறி வரத்து அதிகமானால்தான் சாத்தியம். எனவே, காய்கறிகள் வரத்தை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றார்.மானாமதுரையைச் சேர்ந்த ரா. கார்த்திக் கூறுகையில், “காய்கறிகளின் விலை தினமும் உயர்ந்துகொண்டே இருக்கிறதே தவிர குறையவே இல்லை. காய்கறிக்குப் பதிலாக மீன், கோழிகளை வாங்கி உண்பதற்கும் குடும்ப பட்ஜெட் கட்டுபடியாகாது என்பதால் தட்டை, மொச்சை, கொண்டைக்கடலை உள்ளிட்ட பயறு வகை குழம்பும், முருங்கை, தண்டுக் கீரைகளையும் சேர்க்க வேண்டியுள்ளது” என்றார்.

## விவசாயிகள் இன்றி கொப்பரை கொள்முதல் நிலையம் திறப்பு

திருப்புவனம், : திருப்புவனம் நெல்முடிகரை வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் நேற்று முன்தினம் கொப்பரை தேங்காய் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டது. சிவகங்கை மாவட்ட வேளாண் கூட்டுறவு விற்பனை சங்க மண்டல அலுவலர் சூரியகாந்தி, மாவட்ட கூட்டுறவு துணைப்பதிவாளர் போஸ் ஆகியோர் திறந்து வைத்தனர். இதில் விவசாயிகள் யாரும் பங்கேற்கவில்லை. அவசர கதியில் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டது.

இது குறித்து சிவகங்கை மாவட்ட தென்னை விவசாயிகள் சங்க தலைவர் கனநாதன் கூறுகையில், “ தென்னை விவசாயிகளை அழைக்காமல் தளவாடப் பொருட்கள் ஏதுமின்றி கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து செயல்ப

என்பது கேள்விக்குரியாக உள்ளது” என்றார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

# இன்றைய வேளாண் செய்திகள்

## பனைமரங்கள் அல்ல... பண மரங்கள்...!




‘கல் தோன்றி மண் தோன்றா காலத்தே, முன் தோன்றிய மூத்த குடி தமிழ் குடி’ என்பார்கள். தமிழ் மொழியும், தமிழ் குடிமக்களும் எப்போது தோன்றினார்கள் என்பதை யாராலும் வரையறுக்க முடியாது. அப்படிப்பட்ட தமிழ்மொழி தோன்றியபோதே, பனைமரத்தின் பயன்பாடும் தொடங்கிவிட்டது. தமிழ் மொழியின் எழுத்துகள் முதலில் பதியப்பட்டது பனை ஓலையில்தான். தகவல் பரிமாற்றமே அந்தக் காலங்களில் பனை ஓலையில் எழுதப்பட்ட ஓலைச்சுவடிகள் மூலமாகவே அனுப்பப்பட்டன. இன்று நாம் பெருமையாக பேசுகின்ற தமிழ் இலக்கியங்கள், குறிப்பாக திருக்குறளை திருவள்ளுவர் எழுத்தாணி கொண்டு எழுதியதே பனை ஓலையில்தான். இவ்வளவு ஏன்,

தமிழர்களின் அடையாளமே பனைமரம் தான். பீஷ்மர் பாரதப்போரின் தொடக்கத்தில், பனைமர சின்னத்துடன் கூடிய தன் கொடியுடன் தான் முன்னால் அணிவகுத்து சென்றார் என்று வரலாறு சொல்கிறது.

அப்படிப்பட்ட பனைமரத்தின் பயன்பாடு தமிழ்நாட்டில் குறைந்து கொண்டிருக்கின்ற நேரத்தில், பீகார் மாநிலம் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தை நோக்கி, 'பனைமரத்தில் இருந்து பதநீர் இறக்கும் தொழில்நுட்பத்தை எங்கள் மாநிலத்திற்கு கற்றுக்கொடுங்கள்' என்று ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். இதற்காக தமிழக வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி, பனைமர வளர்ப்பை ஊக்குவிக்க எடுத்துக்கொண்டுவரும் சிறப்பு நடவடிக்கைகளை, பீகார் வேளாண் பல்கலைக்கழக அதிகாரிகள் வெகுவாக பாராட்டி, 'உங்கள் நிபுணத்துவத்தை எங்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்' என்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். இதையொட்டி, பனைமரங்களை வளர்ப்பது, பராமரிப்பது, அதிலிருந்து பயன் எட்டுவது, அதிலும் குறிப்பாக பதநீர் இறக்குவது எப்படி? என்பதை பீகார் மாநில வேளாண் பல்கலைக்கழகத்துக்கும், விவசாயிகளுக்கும் கற்றுக்கொடுக்க 5 பேர் பீகாருக்கு சென்று திரும்பியிருக்கிறார்கள்.

இதேபோல, இப்போது பீகாரில் இருந்து பனை ஏறும் தொழிலில் ஈடுபடும் 30 பேர் கிள்ளிகுளத்தில் உள்ள வேளாண் கல்லூரிக்கு அடுத்த சில தினங்களில் வருகிறார்கள். இந்த கல்லூரிக்கு உள்பட்ட திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு அவர்களை அழைத்துச்சென்று சுண்ணாம்பு கலக்காமல் வெறும் குளிர்பானமாக பதநீரை தயாரிப்பது எப்படி?, பாளையை சீவி மண் கலயம் கட்டி பதநீரை இறக்குவது எப்படி? என்பது பற்றி அவர்களுக்கு களப்பயிற்சி அளிக்கப்போகிறார்கள். இதுமட்டுமல்லாமல், பாளையங்கோட்டையில் 2 பெண் ஏற்றுமதியாளர்கள் பனங்கற்கண்டு, பனை வெல்லத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து எப்படி பொருள் ஈட்டுகிறார்கள் என்பதையும் நேரில் காட்டப்போகிறார்கள். பனைமரம் ஏதோ ஓங்கி உயர்ந்து வளர்ந்து, செங்கல் சூளைக்கு மட்டுமே பயன்தரும்

என்று நினைத்து, அதன் உண்மையான பலனை உணராமல் தமிழ்நாட்டில் வெட்டி வீழ்த்திக்கொண்டே இருக்கிறார்கள். பனைமரம் ஏறுவதற்கு உடலில் வலுவும், நெஞ்சில் தெம்பும் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துவிட்டது. வேர் முதல் நுனிவரை பனைமரத்தின் ஒவ்வொரு பாகமும் நல்ல பணபலனை தருவதாகும். ஒரு பனைமரம் ஒரு ஆண்டுக்கு ரூ.10 ஆயிரம் முதல் ரூ.15 ஆயிரம் வரை நிச்சயமாக வருமானம் தரும் என்கிறார், குமரிஅனந்தன். அந்தவகையில், பனைமரம் உண்மையாகவே பணம் மரம்தான்.

இதன் பயன்பாட்டை அறிந்துதான், எம்.ஜி.ஆர். முதல்–அமைச்சராக இருந்தபோது, ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 60 ஆயிரம் பனங்கொட்டைகளை இலவசமாக வழங்கி பனைமர வளர்ப்பை ஊக்கப்படுத்தினார். ஏரிகள், குளங்கள், வாய்க்கால்களின் எல்லைகளாக கரையோரங்களில், ஏன் கடற்கரைகளில் கூட மூதாதையர்கள் பனைமரங்களை வளர்த்தார்கள். ஏனெனில், இது மண் அரிப்பை வெகுவாக தவிர்க்கும். முதல்–அமைச்சர் ஜெயலலிதாவின் ஆணையின்பேரில், சென்னை மேயர் சைதை துரைசாமி, கூவம், பக்கிங்காம் கால்வாய், அடையாறு கரையோரங்களில் 6½ லட்சம் பனங்கொட்டைகளை நட்டு இருக்கிறார். மேலும், 3 அடி வளர்ந்த பனை மரக்கன்றுகளை கடற்கரை ஓரங்களில் நடத்திட்டமிட்டுள்ளார். தலைநகராம் சென்னையைப்போல, தமிழ்நாடு முழுவதிலும் பனைமரங்கள் நடும் பணியை வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, விவசாயத்துறை தீவிரமாக செயல்படுத்தினால், இதன் பலனை அடுத்த 10 ஆண்டுகளில் வெகுவாக பெறமுடியும்.

**சீசன் தொடங்கியது கல்லாறு அரசு பண்ணையில் காய்த்து குலுங்கும் மங்குஸ்தான் பழங்கள்**



சீசன் தொடங்கி உள்ளதால், கல்லாறு அரசு பண்ணையில் மங்குஸ்தான் பழங்கள் காய்த்து குலுங்குகின்றன.

அரசு தோட்டக்கலை பண்ணை

மேட்டுப்பாளையம் அருகே கல்லாறில் அரசு தோட்டக்கலை பண்ணை அமைந்து உள்ளது. இந்த பண்ணை 1900-ம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் உருவாக்கப்பட்டது. இது 8.92 எக்டேர் நிலப்பரப்பளவில், கடல் மட்டத்தில் இருந்து 360 மீட்டர் உயரத்தில் அமைந்து உள்ளது. இங்கு மிதமான தட்ப, வெப்பம் நிலவுவதால் அரிதாக கிடைக்கக்கூடிய மங்குஸ்தான், துரியன், லிச்சி, லாங்சாட், ரம்பூட்டான், முட்டைப்பழம் ஆகிய பழ ரகங்கள் இங்கு சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. தற்போது இந்த பண்ணையில் மங்குஸ்தான் பழ சீசன் தொடங்கி உள்ளது.

மங்குஸ்தான் பழ மரங்கள்

இது தொடர்பாக பண்ணை அதிகாரிகள் கூறியதாவது:-

இந்த தோட்டக்கலை பண்ணையில் மொத்தம் 126 மங்குஸ்தான் பழ மரங்கள் உள்ளன. இதில் 80 மரங்களில் மங்குஸ்தான் பழங்கள் காணப்படுகின்றன. இந்த பழங்கள் இன்னும் ஒரு வாரத்தில் நன்றாக கனிந்துவிடும்.

கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு மங்குஸ்தான் மரங்கள் மற்றும் மரங்களில் காய்த்து தொங்கும் பழங்களின் எண்ணிக்கை கண்டறியப்பட்டு, அதன் எண்ணிக்கை தோட்டக்கலைத்துறை உயர் அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டு உள்ளது.

கிலோ ரூ.250-க்கு விற்பனை

உயர் அதிகாரிகளின் ஒப்புதல் கிடைத்த பின்னர், சில தினங்களில் மங்குஸ்தான் பழங்களுக்கான டெண்டர் விடப்படும். மங்குஸ்தான் பழ சீசன் இந்த மாதம் (ஜூன்) முதல் வருகிற டிசம்பர் மாதம் வரை நீடிக்கும். இவ்வாறு அவர்கள் கூறினர். இதேபோல் கல்லாறு பகுதியில் உள்ள ஒரு சில தனியார் தோட்டங்களில் மங்குஸ்தான் பழங்கள் அறுவடை செய்யப்பட்டு ஒரு கிலோ ரூ.250-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.இந்த பழம் அரிதாக கிடைப்பவை என்பதாலும், நீரிழிவு நோயை கட்டுப்படுத்தும் குணம் இதற்கு இருப்பதாலும், இதற்கு சந்தையில் எப்போதும் கிராக்கி அதிகம் என்று இதை பயிரிடுபவர்கள் தெரிவித்தனர்.

**வடகாடு மலைப்பகுதியில் பலாப்பழ விளைச்சல் தொடக்கம் விவசாயிகள் மகிழ்ச்சி**



சத்திரப்பட்டி,

வடகாடு மலைப்பகுதியில் பலாப்பழ விளைச்சல் தொடங்கியுள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

<u>பலா மரங்கள்</u>

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் தாலுகாவில் வடகாடு மலைப்பகுதி, வண்டிப்பாதை, கண்ணனூர், பால்கடை, கோட்டைவெளி, பெத்தேல்புரம், புலிகுத்திக்காடு உள்பட 14 மலைக்கிராமங்கள் உள்ளன. இங்கு வசிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் விவசாய தொழிலையே செய்து வருகின்றனர்.

அவர்கள் காய்கறிகள் மற்றும் நெல் சாகுபடியுடன் மா, பலா, வாழை உள்ளிட்ட பல்வேறு பழ மரங்களையும் தங்கள் தோட்டத்தில் வளர்த்து வருகின்றனர். குறிப்பாக பலா மரங்கள் வளர்ப்பில் வடகாடு மலைப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

<u>சீசன் தொடங்கியது</u>

இந்த நிலையில் தற்போது பலாப்பழ சீசன் தொடங்கியுள்ளது. ஒவ்வொரு மரத்திலும் குறைந்தது 10–க்கும் மேற்பட்ட பலாப்பழங்கள் கிடைக்கும்

என்பதாலும் அந்த பழங்களுக்கு சந்தையில் நல்ல விலை கிடைக்கும் என்பதாலும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இது குறித்து வடகாட்டை சேர்ந்த விவசாயிகளிடம் கேட்ட போது, ‘மலைப்பகுதிகளில் விளைச்சலாகும் பலாப்பழங்கள் மிகுந்த சுவையுடன் இருக்கும். இதனால் சந்தையில் எங்கள் பகுதியில் இருந்து கொண்டு செல்லப்படும் பலாப்பழங்களுக்கு நல்ல கிராக்கி உள்ளது.

ஜூன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை பலாப்பழ சீசன் காலமாகும். நன்கு முதிர்ச்சியடைந்த ஒரு பலாப்பழத்திற்கு சந்தையில் தற்போது ரூ.50 முதல் ரூ.100 வரை மொத்த வியாபாரிகள் விலை கொடுக்கின்றனர். இது மேலும் அதிகரிக்கும் என்பதால் எங்கள் பகுதி விவசாயிகள் பலப்பழங்களை விளைவிப்பதில் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் இங்கு விளைவிக்கப்படும் பலாப்பழங்கள் பழனி, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல், மதுரை உள்பட பல்வேறு ஊர்களுக்கும் மொத்த வியாபாரிகளால் கொண்டு செல்லப்படுகிறது’ என்றனர்.

**கல்லணைக்கால்வாயில் ரூ.5 கோடியில் பாலம் கட்டும் பணி கலெக்டர் சுப்பையன் ஆய்வு**



தஞ்சையை அடுத்த ரெட்டிபாளையத்தில் கல்லணைக்கால்வாயில் ரூ.5 கோடியில் பாலம் கட்டும் பணி நடைபெற்று வருவதை கலெக்டர் சுப்பையன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கல்லணைக்கால்வாயில் பாலம்

தஞ்சையை அடுத்த ராமநாதபுரம் ஊராட்சியில் தஞ்சை- பூதலூர் இடையில் ரெட்டிப்பாளையத்தில் கல்லணைக்கால்வாயில் இருந்த பாலம் சேதம் அடைந்து காணப்பட்டது. எனவே இந்த இடத்தில் புதிய பாலம் கட்ட வேண்டும் என அந்த பகுதி மக்கள் நீண்ட நாட்களாக கோரிக்கை விடுத்து வந்தனர். இதையடுத்து ரெட்டிப்பாளையத்தில் உள்ள கல்லணைக்கால்வாயில் நெடுஞ்சாலைத்துறையின் நபார்டு மற்றும் கிராம சாலையின் மூலம் ரூ.4 கோடியே 95 லட்சம் மதிப்பீட்டில் புதிய பாலம் கட்ட முடிவு செய்யப்பட்டது. அதன்படி தற்போது பாலம் கட்டுமான பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

நேரில் ஆய்வு

புதிய பாலம் கட்டும் பணியினை தஞ்சை மாவட்ட கலெக்டர் சுப்பையன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அவர், “கல்லணைக் கால்வாயின் மேல் கட்டப்பட்டு வரும் பாலத்தின் இருபுறங்களில் தடுப்பு சுவர் மற்றும் அணுகு சாலை ஆகியவற்றை விரைந்து அமைக்க வேண்டும். மேலும் பாலத்தின் இருபுறமும் நடுவில் அமைந்துள்ள மின் கம்பங்களை மாற்றி அமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்”என்றார். ஆய்வின் போது நெடுஞ்சாலைத்துறை நபார்டு மற்றும் கிராம சாலை கோட்ட பொறியாளர் கந்தசாமி, உதவி பொறியாளர் பாபுராமன் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## தஞ்சையில் தக்காளி கிலோ ரூ.50-க்கு விற்பனை ஒரே நாளில் ரூ.30 குறைந்தது



தஞ்சையில் தக்காளி கிலோ ரூ.50-க்கு விற்கப்பட்டது. ஒரே நாளில் விலை ரூ.30 குறைந்தது.

தக்காளி விலை உயர்வு

தமிழகத்தில் தக்காளி விளைச்சல் குறைவு காரணமாக விலை அதிகரித்து காணப்பட்டது. கடந்த வாரம் கிலோ ரூ.40-க்கு விற்கப்பட்ட தக்காளி படிப்படியாக உயர்ந்து கிலோ ரூ.80-க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த நிலையில் நேற்று விலை குறைந்து 1 கிலோ தக்காளி ரூ.50-க்கு விற்பனை செய்யப்பட்டது.

தஞ்சை காமராஜர் மார்க்கெட்டிற்கு ஆந்திரா, கர்நாடகா, ஓசூர், பழனி, உடுமலைப்பேட்டை, ஒட்டன்சத்திரம் மற்றும் தஞ்சையை சுற்றி உள்ள பகுதிகளில் இருந்தும் காய்கறிகள் விற்பனைக்கு கொண்டுவரப்படும்.

தஞ்சை காமராஜர் மார்க்கெட்டிற்கு 1 நாளைக்கு 7 முதல் 8 லாரிகளில் தக்காளி விற்பனைக்கு கொண்டுவரப்படும். ஆனால் விளைச்சல் குறைவு காரணமாக தஞ்சை மார்க்கெட்டிற்கு மைசூரில் இருந்து மட்டும் தக்காளி விற்பனைக்கு வந்தது. அதுவும் குறைந்த அளவே 3 லாரிகளில் விற்பனைக்கு வந்தது. இதனால் விலை உயர்ந்து காணப்பட்டது.

விலை குறைந்தது

இந்த நிலையில் தஞ்சை மார்க்கெட்டிற்கு தமிழகத்தில் உள்ள ஓசூர் பகுதிகளில் இருந்து தக்காளி விற்பனைக்கு வந்ததால் விலை குறைவு ஏற்பட்டது. நேற்று 1 கிலோ தக்காளி கிலோ ரூ.30 விலை குறைந்து ரூ.50-க்கு விற்பனை செய்யப்பட்டது. தஞ்சை காமராஜர் மார்க்கெட்டில் நேற்று விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை நிலவரம் வருமாறு:-

ஒரு கிலோ தக்காளி - ரூ.45 முதல் ரூ.50 வரை, கேரட் - ரூ.30, பீட்ரூட் - ரூ.40, சவ்சவ் -ரூ.30, முள்ளங்கி - ரூ.20, இஞ்சி - ரூ.80, புடலங்காய் - ரூ.30 முதல் ரூ.40 வரை, வெண்டைக்காய் - ரூ.40, பாகற்காய் - ரூ.40 முதல் ரூ.50 வரை, மிளகாய் - ரூ.30, காலிபிளவர் - ரூ.40, சேனைக்கிழங்கு - ரூ.60, சின்னவெங்காயம் - ரூ.40 முதல் ரூ.50 வரை, பல்லாரி - ரூ.20, பூசணிக்காய்- ரூ.15, கத்தரிக்காய்- ரூ.20, முட்டைக்கோஸ் - ரூ.30, முருங்கைக்காய்- ரூ.60.